DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.81/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயலட்சுமி | | : | |
| க/பெ | : | டில்லிபாபு | மதம் | : | |
| கிராமம் | : | அம்பத்தூர் | தொழில் | : | Makeup Artist |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 06.03.2026**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: PW1**

பிரமாண வாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எதிரி என் வசம் கொடுத்த ஆதார்அட்டை, PAN Card, Passport size Photo திருப்பி தருமாறு அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரில் எதிரியிடம் 2 வங்கியின் காசோலை வாங்கியதாகவும், அது போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டதால் அதில் ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்ய பயன்படுத்தியுள்ளதாகவும், மற்ற காசோலை ஆதார்அட்டை, PAN Card, Passport size Photo திருப்பி ஒப்படைப்பதாக காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் **(எ.ம.சா.ஆ.1) (2 எண்ணிக்கை)**ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் வீட்டு பக்கத்தில் உள்ள நபர்களுக்கு நிதிநிறுவனம் மூலம் பணம் வாங்கி தரும் பழக்கம் உள்ளதால் எதிரி என்னிடம் உதவுமாறு கேட்டார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் கேட்டிருந்தால் அதற்கு காசோலை மட்டும் தான் பாதுகாப்பிற்காக வாங்கியிருப்பேன் என்றும், ஆதார்அட்டை,

PAN Card, Passport size Photo வாங்க அவசியமில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எதிரி என் மீது அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் எதிரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் அதன் பின்பு தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி விவரம் எதுவும் புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியின் மாமியாருக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் எதிரிக்கு மாமியார் ஆவதற்கு முன்பாகவே அவரை எனக்கு நன்கு பழக்கம். எதிரி மாமியார் மீது இருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக கடன் வாங்கி தருவதாக கூறி எதிரியிடம் இருந்து நிரப்பபடாத காசோலை வாங்கி நானே நிரப்பி இவ்வழக்கிற்கு வேண்டி தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நிதிநிறுவனத்தில் கடன் வாங்கி தருவதற்காக தான் எதிரியிடம் இருந்து ஆதார்அட்டை, PAN Card, Passport size Photo வாங்கியதாகவும், அதை பயன்படுத்தி எதிரி மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K